முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 122/2013

பி.வா.சா.1 – தனபால்

19–08–2024 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1) தாவாச் சொத்து ஆதியில் நஞ்சம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அந்த சொத்து நஞ்சம்மாளுக்கு 14.09.1942 ம் தேதியிட்ட கிரய ஆவணத்தின்படியும் 25.5.1948 பாகப்பிரிவினைப்படி பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். நஞ்சம்மாள் 2.7.1988 ல் இறந்துபோனார் என்றால் சரிதான். நஞ்சம்மாள் இறந்தபோது அவருடைய கணவரும் 3 மகன்கள் ஒரு மகளும் உயிருடன் இருந்தார்கள் என்றால் சரிதான். மகன்கள் சரவணபவன், சந்திரசேகரன், வாதி தெய்வசிகாமணி என்றால் சரிதான்.

2) நஞ்சம்மாளின் மகள் புஷ்பாத்தாள் என்றால் சரிதான். தாவாச் சொத்து முதலில் இனாம் பூமியாக இருந்தது என்றால் சரிதான். சின்னச்சாமி கவுண்டர் இறந்த பிறகு நஞ்சம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்தை என் தகப்பனார் சந்திரசேகரன், மற்றும் நஞ்சம்மாளின் மற்ற வாரிசுகள் வாதியே சொத்தை வைத்துக் கொள்ள சுவாதீனத்தில் விட்டுவிட்டார்கள் என்றால் தவறு. என் தகப்பனார் சந்திரசேரும் நஞ்சம்மாளின் மற்ற வாரிசுகள் தாவா சொத்தில் அவர்களுக்கு தாவா சொத்திலுள்ள உரிமை பாத்தியத்தை வாய்மொழியாக வாதிக்கு கொடுத்து விட்டார்கள் என்றால் சரியல்ல.

3) புஷ்பாத்தாள் மற்ற குடும்பச் சொத்துக்களை பொறுத்து அ.வ.எண்.603/2012 ஐ சார்பு நீதிமன்றம் திருப்பூரில் பாகம் கேட்டு தாவா தாக்கல் செய்தார் என்றால் சரிதான். இந்த தாவாச் சொத்தை புஷ்பாத்தாள் அ.வ.எண்.603/2012 ல் சேர்க்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு நிலுவையில் இருந்ததால் சேர்க்கவில்லை. அ.வ.எண்.603/12 தரப்பினர்களுக்கு இடையே சமாதானம் ஏற்பட்டு பாகம் பிரித்துக் கொண்டு ராஜியாகிவிட்டார்கள் என்றால் சரிதான்.

4) தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான அ.வ.எண்.603/2012 ன் இறுதிநிலை தீர்ப்பாணை என்றால் சரிதான். அது ஏற்கனவே பி. வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. தாவாச் சொத்து வாதி தெய்வசிகாமணிக்கு கொடுத்துவிட்டதால் தான் அ.வ.எண்.

603/2012 ல் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் அ.வ.எண்.603/12 ல் பைசல் ஏற்பட்டபோதும் தாவாச் சொத்தை சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

5) தாவாச் சொத்தில் 1 முதல் 3 பிரதிவாதிகள் வாதியின் சுவாதீனத்தை இடைஞ்சல் செய்யக்கூடாது என வாதி கோரிய முதல்நிலை தீர்ப்பாணை வழங்க எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரியல்ல. பொது சுவாதீனத்தை இடைஞ்சல் செய்யக்கூடாது என பரிகாரம் வழங்க ஆட்சேபணை இல்லை. அவருடைய சுவாதீனத்தை 1 முதல் 3 பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்ய எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் தவறு. கூட்டு சுவாதீனத்தை இடைஞ்சல் செய்ய எனக்கு ஆட்சேபணை இல்லை. தாவாச் சொத்தில் வாதி மட்டும் சுவாதீனத்தில் இருந்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல.

6) தாவா சொத்தில் எங்களுக்கு எந்த உரிமையும் பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகள் பெயரில் தாவா தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. தாவா சொத்தில் வாதி மட்டும் தனிப்பட்ட சுவாதீனத்தில் உள்ளதால் 1 முதல் 3 பிரதிவாதிகள் வோதியின் சுவாதீனத்தை இடைஞ்சல் செய்கிறார்கள் என்றால் சரியல்ல. அதற்காக தான் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதி கோரியபடி தாவா தீர்ப்பாகவேண்டும் என்றால் சரியல்ல.

3 ம் பிரதிவாதி தரப்பில் முறையீடு இல்லை. குறுக்கு விசாரணை இல்லை.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2024.08.19 05:14:39 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி

திருப்பூர்.